உங்கள் அபிமான தினதமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்! கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 21.07.2026 • மலர் 04 • இதழ்: 202 • செவ்வாய்க்கிழமை • Edition : Nagercoil • 21.07.2026 • Vol : 04 • Issue : 202 • Page : 4 • Rs. 5/-

# ஜே.பி.நட்டா உடன் போராட்டக்குழு பிரதிநிதிகள் சந்திப்பு

## சிஜேபி முன்வைத்த 3 நிபந்தனைகள் என்னென்ன?

புதுடெல்லி, ஜூலை 21

மத்திய அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலக வேண்டும், நீட் தேர்வால் தற்கொலை செய்துகொண்ட மாணவர்களுக்கு தலா ரூ.1 கோடி இழப்பீடு வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட 3 நிபந்தனைகளை மத்திய அமைச்சர் ஜே.பி. நட்டாவிடம் கரப்பான் பூச்சி ஜனதா கட்சியினர் முன்வைத்துள்ளனர்.

நாடாளுமன்றம் நோக்கிய பேரணியை கரப்பான்பூச்சி ஜனதா கட்சி நடத்தி வரும் நிலையில், அந்த அமைப்பின் இரண்டு பிரதிநிதிகளை மத்திய அமைச்சர் ஜே.பி.நட்டா இன்று சந்தித்துப் பேசினார். இதன்மூலம் மத்திய அரசுக்கும் சிஜேபி கட்சிக்கும் இடையே பேச்சுவார்த்தை தொடங்கியுள்ளது.

தேர்வு முறைகேடுகளுக்கு பொறுப்பேற்று மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலக வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி ஆயிரக்கணக்கான கரப்பான்பூச்சி ஜனதா கட்சியினர் இன்று நாடாளுமன்றத்தை நோக்கி பேரணி நடத்தினர்.

இந்த போராட்டத்தை முன்னிட்டு டெல்லியில் பலத்த போலீஸ் பாதுகாப்பு, கண்ணீர் புகைக் குண்டுவீச்சு, தடியடி, கைது நடவடிக்கைகள் நடந்தன.

டெல்லியில் இன்று பதற்றமான சூழல் ஏற்பட்டதால், பேச்சுவார்த்தை நடத்த அரசு தரப்பிலிருந்து அழைப்பு விடுக்கப்பட்டது. இதனையடுத்து சிஜேபி செய்தித் தொடர்பாளர்களான சவுரவ் தாஸ் மற்றும் அசுதோஷ் ரங்கா ஆகியோர் இன்று மதியம் ஜே.பி.நட்டாவின் இல்லத்தில் அவரைச் சந்தித்தனர்.

இந்த சந்திப்புக்குப் பிறகு பேசிய சவுரவ் தாஸ் வெளியிட்ட எக்ஸ் பதிவில், '2 மணி நேரத்துக்கும் மேலாகக் காத்திருந்த பிறகு, அசுதோஷ் ரங்காவும் நானும் ஜே.பி.நட்டாவை அவரது இல்லத்தில் 10 நிமிடங்கள் சந்தித்தோம். கோரிக்கைகள் அடங்கிய கடிதத்தை நாங்கள் எழுத்துப்பூர்வமாக சமர்ப்பித்துள்ள நிலையில், அவர் இது குறித்து கட்சிக்குள் பேசுவதாக உறுதியளித்துள்ளார். அதே வேளையில், பெருமளவிலான கைது நடவடிக்கைகள் குறித்த தகவல்களும் வருகின்றன' என்று கூறினார்.


மேலும், 'நானும் சவுரவ் தாஸும் இன்னும் நட்டாவின் இல்லத்தில் இருக்கிறோம். எங்களின் பின்வரும் கோரிக்கைகள் குறித்துத் தங்கள் தலைமையுடன் கலந்தாலோசிக்க நட்டா சிறிது அவகாசம் கோரியுள்ளார். நாங்கள் முன்வைத்த 3 கோரிக்கைகள்.

1) சோனம் வாங்சுக்கை உடனடியாக விடுவிக்க வேண்டும்.

2) தர்மேந்திர பிரதான் பதவி விலக வேண்டும்.

3) நீட் தேர்வால் தற்கொலை செய்து கொண்ட மாணவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.1 கோடி இழப்பீடு வழங் வேண்டும்' எனத் தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பு குறித்தோ அல்லது கோரிக்கைகளில் ஏதேனும் ஏற்றுக்கொள்ளப்படுமா என்பது குறித்தோ அரசிடமிருந்து அதிகாரப்பூர்வ அறிக்கை எதுவும் இதுவரை வெளியாகவில்லை.



இந்தச் சூழலில் "இனி முடிவு எடுக்க வேண்டியது அவர்கள்தான்" என்று சவுரவ் தாஸ் தனது பதிவில் குறிப்பிட்டார்.

சவுரவ் தாஸ் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'அசுதோஷ் ரங்கா மற்றும் நான் மதியம் 12 மணி முதல் ஜே.பி. நட்டாவின் இல்லத்தில் இருக்கிறோம். தர்மேந்திர பிரதான் உடனடியாகப் பதவி விலக வேண்டும் அல்லது பணிநீக்கம் செய்யப்பட வேண்டும் என்பது உள்ளிட்ட எங்கள் கோரிக்கைகள் அவரிடம் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இது குறித்து உரிய மட்டத்தில் ஆலோசிப்பதாக அமைச்சர் எங்களுக்கு உறுதியளித்தார். இருப்பினும்,

இதுவரை எந்தவொரு உறுதியான வாக்குறுதியும் அளிக்கப்படவில்லை. எங்கள் கோரிக்கை நிறைவேற்றப்படும் வரை அமைதியான முறையில் போராடும் நாங்கள் ஓயமாட்டோம்' எனத் தெரிவித்தார்.



கூட்டுறவு வங்கி ஊழியர்கள் சார்பில்

## 13 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி பேரணி மற்றும் ஈரோடு ஆட்சியரிடம் மனு அளிப்பு

ஈரோடு ஜூலை 21

தமிழகம் முழுவதும் உள்ள தொடக்க மற்றும் நகர் கூட்டுறவு கடன் சங்கங்களில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் அதன் கட்டுப்பாட்டில் உள்ள நியாயவிலைக் கடைப் பணியாளர்களின் 13 அம்ச கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி, தமிழ்நாடு மாநில தொடக்க கூட்டுறவு வங்கி அனைத்து பணியாளர்கள் சங்கத்தின் சார்பில் மாநில தழுவிய அளவில் பேரணி நடத்தப்பட்டு, ஈரோடு மாவட்ட ஆட்சியரிடம் கோரிக்கை மனு சமர்ப்பிக்கப்பட்டது.

ஈரோட்டில் நடைபெற்ற இந்த மாபெரும் கோரிக்கை பேரணிக்கு மாவட்டத்தலைவர் S.M.மேசப்பன் தலைமை தாங்கினார். மாவட்டச்செயலாளர் K.மாரிமுத்து முன்னிலை வகித்தார். பேரணியின் நிறைவில், மாவட்ட ஆட்சியர் வாயிலாக தமிழக முதலமைச்சருக்கு அனுப்பும் வகையில் கோரிக்கை மனு அளிக்கப்பட்டது. இந்நிகழ்வில் மாவட்ட துணைத்தலைவர்கள் M.மதியழகன், P. செந்தில்குமார், மாவட்ட இணைச்செயலாளர்கள் G.முத்துகிருஷ்ணன், R.வசந்தகுமார், ஒன்றிய நிர்வாகிகள், சங்க உறுப்பினர்கள், நியாயவிலைக்கடை பணியாளர்கள், நகை மதிப்பீட்டாளர்கள், கணினி பணியாளர்கள் மற்றும் ஓய்வு பெற்ற பணியாளர்கள் சங்க மாவட்ட தலைவர் பூசப்பன், மாவட்டச்செயலாளர் முஜிபுல்லா உள்ளிட்ட திரளானோர் கலந்து கொண்டு, கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி முழக்கமிட்டனர். நியாயவிலைக் கடைகள் மூலம் செயல்படுத்தப்படும் தாயுமானவர் திட்டத்தில் உள்ள குறைபாடுகளைக் களைந்து மறுபரிசீலனை செய்ய வேண்டும். இதில் நடமாட இயலாத முதியோர்கள், நோயாளிகள், மாற்றுத்திறனாளிகளை மட்டுமே சேர்க்க வேண்டும் என்றும், வசதி படைத்தோர் மற்றும் 100 நாள் வேலை திட்டத்திற்கு செல்வோர் ஆகியோரை இத்திட்டத்திலிருந்து விடுவிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

மேலும், பயனாளி குடும்பத்தில் உள்ள பிற உறுப்பினர்களிடம் பொருட்களை விநியோகம் செய்ய அனுமதிப்பதோடு, கைரேகை மற்றும் கருவிழி சரிபார்ப்பு முறையை ரத்து செய்து பாக்கெட் முறையில் விநியோகம் செய்ய வேண்டும் எனவும், ஏற்றி இறக்கும் கூலி மற்றும் வண்டி வாடகைத் தொகையை உயர்த்தி வழங்க வேண்டும் எனவும் கோரப்பட்டது. கடந்த 01.04.2023 முதல் புதிய ஊதியம் அனுமதிக்கப்பட்ட நிலையில், விதிக்கப்பட்ட நிபந்தனைகளால் 40 சதவீத பணியாளர்கள் புதிய ஊதியம் பெற இயலாத நிலை உள்ளதால் அந்நிபந்தனைகளை முழுமையாகத் தளர்த்தி புதிய ஊதிய நிலுவைத் தொகையை வழங்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

பணியாளர்கள் ஓய்வு பெறும் நாளிலேயே அனைத்து நிதிப் பலன்களையும் வழங்கிட வேண்டும், 2021ம் ஆண்டுக்குப் பின்னர் பணி ஓய்வு பெற்ற அனைவருக்கும் ஓய்வூதியம் வழங்கிட வேண்டும், கருணைத்தொகையை ₹1,000 ஆக உயர்த்தி வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட ஓய்வூதிய சலுகை கோரிக்கைகளும் முன்வைக்கப்பட்டன.

இரண்டாண்டுகளுக்கு மேல் பணிபுரியும் கணினி பணியாளர்களைச் சிறப்புத் தேர்வுகள் மூலம் பணி நிரந்தரம் செய்ய வேண்டும், தகுதியுள்ள நகை மதிப்பீட்டாளர்களை நிரந்தரப்படுத்த வேண்டும், மாவட்ட அளவில் பணிமூப்புப் பட்டியல் தயாரித்து பதவி உயர்வு வழங்க வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது. வெளி மாவட்டங்களில் பணிபுரிவோருக்குச் சொந்த மாவட்டத்திற்கு இடமாறுதல் வழங்க வேண்டும்,

பணிக்கொடையை ₹25 லட்சமாக உயர்த்தி வழங்க வேண்டும், செயலாளர்களைக் கட்டாயப்படுத்தி பயிர்க்கடன் வழங்கச் சொல்லி மன உளைச்சலுக்கு ஆளாக்குவதையும், வாய்மொழி உத்தரவுகளை அமல்படுத்தத் தவறினால் ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதாக அச்சுறுத்துவதையும் கைவிட வேண்டும் எனவும் கோரிக்கை வைக்கப்பட்டது.

இக்கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத பட்சத்தில், வரும் 03.08.2026 முதல் காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக சங்க நிர்வாகிகள் எச்சரித்துள்ளனர்.

ஈரோடு அரச்சலூர் பேரூராட்சியில் சர்ச்சை

## நியாயம் கிடைக்கும் வரை உள்ளிருப்புப் போராட்டம் தொடரும் என கவுன்சிலர் அறிவிப்பு



ஈரோடு ஜூலை 21

ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டம், அரச்சலூர் பேரூராட்சியில் நேற்று மன்றக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கலந்துகொண்ட பெண்கவுன்சிலர், அரச்சலூர் பேரூராட்சி துணைதலைவர் துளசி மணி சக்திவேல் பேரூராட்சி செயல் அலுவலரிடம் முக்கிய சரமாரிக் கேள்விகளை எழுப்பினார்.

கடந்த 04.03.2026 அன்று நடைபெற்ற வேண்டிய மன்றக் கூட்டத்தின் போது, தலைவர் விஜயகுமார் மற்றும் பிற கவுன்சிலர்கள் தன்னைத் தாக்க முயன்றதாகவும், இதனால் தான் உள்ளிருப்புப் போராட்டத்தில் ஈடுபட்டதால் அன்றைய கூட்டம் நடைபெறவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அன்றைய தினம் மன்றக் கூட்டம் ரத்து செய்யப்பட்டுவிட்டதாகச் செயல் அலுவலர் தெரிவித்திருந்த நிலையில், தற்போது அந்த நாளில் பல்வேறு பணிகள் நிறைவேற்றப்பட்டதாக மினிட் நோட்டில் (Minutes Book) பதிவு செய்யப்பட்டுள்ளது குறித்து அவர் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த செயல் அலுவலர், "மன்றக் கூட்டத்தை நடத்துவதும், ரத்து செய்வதும் தலைவர் சார்ந்த விஷயம்; இதில் எனக்கு எந்தத் தொடர்பும் இல்லை" எனக் கூறியதாகத் தெரிகிறது.

செயல் அலுவலரின் இந்த அலட்சியமான பதிலுக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ள அக்கவுன்சிலர், "எனக்கு உரிய நியாயம் கிடைக்கும் வரை அரச்சலூர் பேரூராட்சி அலுவலக வளாகத்திலேயே எனது உள்ளிருப்புப் போராட்டத்தைத் தொடர்வேன்" என்று உறுதியாகத் தெரிவித்துள்ளார். இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



சென்னை, உலக தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் தரமணியில் தமிழ்நாடு அரசு மாநில அளவிலான பேச்சுப்போட்டியில் திருவாரூர் மாவட்டம், கருவாக்குறிச்சி அரசு மேல்நிலைப் பள்ளியில் 11ஆம் வகுப்பு படிக்கும் மாணவர் பி. கிஷோர் முதலிடம் பிடித்து வெற்றி பெற்றுள்ளார். மாநில அளவில் முதலிடம் பிடித்த மாணவன் கிஷோருக்கு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் ஆ.ராஜ்மோகன் அவர்களால் ரூபாய் 50,000 காசோலையும், பாராட்டுச் சான்றும் வழங்கி கௌரவித்தார்.



கிருஷ்ணகிரி அரசு மகளிர் கலைக்கல்லூரி வளாகத்தில், இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பு 2027, முதல் கட்டமாக 17.07.2026 முதல் 31.07.2026 வரை வீட்டுப் பட்டியல் மற்றும் வீடுகளின் கணக்கெடுப்பிற்கான சுயக் கணக்கெடுப்பு நடைபெறுவது குறித்த விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) .முருகேசன், கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் .ஷாஜகான், செய்திமக்கள்தொடர்புஅலுவலர்.சு.மோகன், கிருஷ்ணகிரி துணை காவல் கண்காணிப்பாளர் .ராமசந்திரன், தனி வட்டாட்சியர் (பேரிடர் மேலாண்மை) .வெங்கடேசன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

## வீட்டுமனை பட்டா கேட்டு கண்ணில் கறுப்பு துணி கட்டி மனு கொடுக்க வந்த பொது மக்கள்




ஈரோடு ஜூலை 21

தமிழ்நாடு அருந்ததியர் அரசியல் அதிகார உரிமை மீட்பு கூட்டியக்கம் ஒருங்கிணைப்பாளரும் விடுதலை வேங்கைகள் கட்சியின் மாநில தலைவருமான தமிழின்பன் தலைமையில் பொதுமக்கள் ஈரோடு கலெக்டர் அலுவலகத்தில் மனு கொடுத்தனர். கண்களில் கறுப்பு துணி கட்டியபடி வந்த அவர்கள் ஈரோடு மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுத்தனர். அதில் கூறியிருப்பதாவது ஈரோடு மாவட்டம் பெருந்துறை அருகே உள்ள உள்ள பாண்டியம் பாளையம் ஊராட்சி சத்யாபுரம் பகுதியில் 70 குடும்பங்கள் பல ஆண்டுகளாக வாழ்ந்து வருகிறார்கள் இதுவரை எங்களுக்கு வீட்டுமனை பட்டா வழங்கவில்லை மற்றும் சாலை மின்விளக்கு மற்றும் அடிப்படை வசதிகள் போன்ற போன்ற வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை இது தொடர்பாக ஏற்கனவே பலமுறை மனு கொடுத்துள்ளோம் எனவே எங்களின் நீண்ட கால பிரச்சனையை தீர்த்து வைக்க உடனடியாக வீட்டு மனை பட்டா மற்றும் அடிப்படை வசதிகளை செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம் இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.




# மக்கள் தொகை சுய கணக்கெடுப்பு இராட்சத பலூணை பறக்கவிட்டு விழிப்புணர்வு ஏற்படுத்திய கலெக்டர்

நாகர்கோவில், ஜூலை. 21

நாகர்கோவில் மாநகராட்சி சார்பில் மக்கள் தொகை சுயகணக்கெடுப்பின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வுநிகழ்ச்சிமாவட்ட ஆட்சியர் அலுவலக வளாக முகப்பில் நேற்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் தலைமை வகித்தார். மாவட்ட வருவாய் அலுவலர் எம்.வேலுமணி, நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் ஐஸ்வர்யா, உதவி ஆட்சியர் பயிற்சி ர.மோனிகா, ஆகியோர் முன்னிலை வகித்தனர். தொடர்ந்து இராட்சத வண்ண பலூண்ணை பறக்கவிட்டு கலெக்டர் பிரதாப் தெரிவிக்கையில்:

இந்தியாவில் மக்கள் தொகை கணக்கெடுப்பான "சென்சஸ் 2027"ஐ முழுவதுமாக டிஜிட்டல் முறையில் நடத்த தயாராகி வருகிறது. நாடு முழுவதும் நடத்தப்படும் இந்த சர்வே வாயிலாக மக்கள் தொகை குறித்த புள்ளிவிவரங்களை முழுமையாக அறிய முடியும். இந்த சர்வேயின் முக்கிய அம்சம் சுயக்கணக்கெடுப்பாகும். பொதுமக்கள் அனைவரும் தங்களது சுயகணக்கெடுப்பு விவரங்களை துல்லியமாகவும், விடுபடாமலும் பதிவு செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தி பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டு வருகிறது.

அதன்ஒருபகுதியாக இன்று நாகர்கோவில் மாநகராட்சி சார்பில் இராட்சச வண்ண பலூண்ணை பறக்கவிட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. தமிழ்நாட்டில், சுய கணக்கெடுப்பு காலம் ஜூலை 17ம் தேதி முதல் 31ம் தேதி வரை மேற்கொள்ளப்படும். இந்த கணக்கெடுப்பில் பங்கேற்று, குறிப்பிட்ட காலத்திற்குள் (31.07.2026) சுய கணக்கெடுப்பை நிறைவு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். கணக்கெடுப்பு படிவத்தில் 33 கேள்விகள் இடம்பெற்றிருக்கும். தனிநபர் பாதிக்க கூடிய எந்தவொருதகலும் இடம்பெறாது. சுயகணக்கெடுப்பு என்பது நாட்டின் மற்றும் மாவட்டத்தின் வளர்ச்சிக்கு அடித்தளமாக விளங்கும் ஒரு முக்கியப் பணியாகும். சரியான கணக்கெடுப்புத் தரவுகளின் அடிப்படையிலேயே எதிர்கால நலத்திட்டங்களும், உள்கட்டமைப்பு வசதிகளும் திட்டமிடப்படுகின்றன. எனவே, நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட மற்றும் மாவட்டத்தைச் சேர்ந்த பொதுமக்கள் அனைவரும் தங்களது விவ ரங்களை விடுபடாமல் பதிவு செய்ய வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு கூறினார்.அதனைத்தொடர்ந்து கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் வண்ணப்பலூண்களைபறக்கவிட்டு விழிப்பு ணர்வு ஏற்படுத்தினார். நான் சுயகணக்கெடுப்பை மேற்கொள்வேன் என்ற கையெழுத்து இயக்கத்தினை துவக்கி வைத்து கையெழுத்திட்டார்கள். நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் எஸ்.காளீஸ்வரி (பொது), நாகர்கோவில் வருவாய் கோட்டாட்சியர் செந்தில் வேல்முருகன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் செந்தூர் ராஜன், தன்னார்வலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

# மணவாளக்குறிச்சி அருகே

# பைக் விபத்தில் முதியவர் பலி 2 பேருக்கு தீவிர சிகிச்சை

குளச்சல், ஜூலை. 21

மணவாளக்குறிச்சி அருகே கல்படி, காருபாறை பகுதியை சேர்ந்தவர் செல்வராஜ் (63). அதே பகுதியை சேர்ந்தவர் சுபாஷ். இந்த நிலையில் செல்வராஜ் தனது மொபட் வாகனத்தில் சுபாஷை ஏற்றிக்கொண்டு சென்றார். அப்போது வெள்ளிமலை என்ற இடத்தில் செல்லும்போது அந்த வழியாக ஈசன்தங்கு பகுதியை சேர்ந்த கோபாலகிருஷ்ணன் மகன் ராஜா (21) என்பவர் ஓட்டி வந்த பைக், மொபட் மீது மோதியது.

இந்த விபத்தில் தூக்கி வீசப்பட்டு 3 பேரும் பலத்த காயம் அடைந்தனர். இதை அடுத்து அந்த வழியாக வந்தவர்கள் காயமடைந்த 3 பேரையும் சிகிச்சைக்காக குமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு டாக்டர்கள் பரிசோதனை செய்ததில்செல்வராஜ்இறந்துவிட்டதாகதெரிவித்தனர். சுபாஷ் மற்றும் ராஜாவுக்கு சிகிட்சை அளிக்கப்பட்டு வருகிறது. இது குறித்து செல்வராஜ் மகன் விஜய ராஜன் 38 என்பவர் அளித்த புகாரின் பேரில் மணவாளக்குறிச்சி போலீசார்வழக்குபதிவுசெய்துவிசாரித்துவருகின்றனர்.

# தருமபுரி மாவட்ட வனத்துறை அறிவிப்பு

தருமபுரி ஜூலை 21

நீதிமன்றத்தால் தேடப்படும் குற்றவாளி: பெயர்:வெங்கடாசலம் த/பெ : ராமசாமி முகவரி: பாப்பம்பாடி கிராமம் மற்றும் பாப்பிரெட்டிப்பட்டி வட்டம் தர்மபுரி மாவட்டம். தருமபுரி வனசரக பெருமர குற்ற வழக்கு (STOR) எண்: 1/2012. நாள்: 31/03/2012

U/S 1882ம் ஆண்டு தமிழ்நாடு வனச்சட்டம் V சட்டப்பிரிவு 21 (d) (e) (f), 36(A),41,49(A),51 மற்றும் தமிழ்நாடு திருத்திய வன சட்டம் 1970 3(1) மற்றும் 7 வழக்கின் தருமபுரி மாவட்ட குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண்: 2, CC NO. 71/2015.

மேலே குறிப்பிட்ட நபர் நீதிமன்றத்தால் தேடப்படும் குற்றவாளி ஆவார். எனவே இவரைப் பற்றி தகவல் தெரிந்தால் கீழ்கண்ட முகவரியில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி எண்களுக்கு தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

வனசரக அலுவலர் தருமபுரி வனசரகம், தருமபுரி செல்:8925931540. வனவர், பரிகம் பிரிவு தருமபுரி வனச்சரகம் தருமபுரி செல்: 8925932308. வனக்காப்பாளர், பரிகம் வடக்கு வனக் காவல் சுற்று, தருமபுரி, வனச்சரகம் தருமபுரி செல்: 8925932357. ஆகிய எண்களில் தொடர்பு கொண்டு தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

# எலுமிச்சம்பள்ளம் என்ற பகுதியில் விபத்து



திருவண்ணாமலை, ஜூலை 21

திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் வட்டம் குப்பனத்தம் பகுதியைச் சேர்ந்தவர் சதாம்உசேன் (32) இவர்தனது மனைவி மற்றும் இரண்டு வயது குழந்தையுடன் குப்பநத்தம் பகுதியில் இருந்து ஊத்தங்கரை வழியாக தர்மபுரி மருத்துவமனைக்காக சென்றுள்ளார்

அப்போது ஓலைப்பட்டி சிப்காட் அருகே எலுமிச்சம் பள்ளம் என்ற பகுதியை கடக்கும் போது எதிரே காரிமங்கலத்தில் இருந்து திருவண்ணாமலைக்கு வைக்கோல் ஏற்றி வர சென்ற வாகனம் (TATA ACE) மீது மோதியதில் இருசக்கர வாகனத்தில் பயணம் செய்த சதாம்உசேன் மனைவி சபீனா(26) என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்

மேலும் சதாம்உசேன் பலத்த காயங்களுடன் போச்சம்பள்ளி அரசு பொது மருத்துவமனையின் முதல் உதவி செய்து கவலைக்கிடமான நிலையில் கிருஷ்ணகிரி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார் மேலும் இந்த தம்பதியின் இரண்டு வயது குழந்தை சிறு காயங்களுடன் மீட்கப்பட்டு போச்சம்பள்ளி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டது புலியூரில் இருந்து சிப்காட் வரை செல்லும் சாலை ஒரு வழிச்சாலை என்பதால் இருசக்கர வாகனங்கள் மற்றும் ஊழியர்களை ஏற்றுச் செல்லும் வாகனங்கள் நாள்தோறும் காலையும் மாலையும் அதிவேகம் காரணமாக விபத்து ஏற்படுவதாக பொதுமக்கள் குற்றச்சாட்டு இந்த சம்பவம் குறித்து போச்சம்பள்ளி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்



# ஈரோட்டில்

# பள்ளி மற்றும் பொதுமக்கள் கூடும் இடங்களுக்கு அருகில் உள்ள டாஸ்மாக் கடைகளை அகற்றக் கோரி ஈரோடு ஆட்சியரிடம் மனு

ஈரோடு, ஜூலை 21

ஈரோடு மாவட்டத்தில் பள்ளி, கல்லூரி, மருத்துவமனைகள் மற்றும் கோவில்கள் போன்ற பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களுக்கு அருகில் செயல்பட்டு வரும் டாஸ்மாக் மதுபானக்கடைகளைஅகற்றக் கோரியும், மாவட்டம் முழுவதும் இது குறித்து முழுமையான ஆய்வு மேற்கொள்ள வலியுறுத்தியும் தன்னார்வலர் ராயல் K.சரவணன் மற்றும் 'We The Leaders' அமைப்பினர் ஈரோடு மாவட்ட ஆட்சியரிடம் கோரிக்கை மனு ஒன்றை அளித்துள்ளனர். அந்த மனுவில், பெருந்துறை ஒன்றியம், ஈங்கூர் பகுதியில் செயல்பட்டு வரும் டாஸ்மாக் கடை எண்: 3900 ஆனது பள்ளி வளாகத்தில் இருந்து சுமார் 375 மீட்டர் தொலைவிலும், அம்மாபேட்டை ஒன்றியம், சென்னம்பட்டி ஊராட்சி, சந்தப்பேட்டை பகுதியில் செயல்படும் டாஸ்மாக் கடை எண்: 3952 ஆனது ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியிலிருந்து சுமார் 250 மீட்டர் தொலைவிலும் இயங்கி வருவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இத்தகைய கடைகளால் பள்ளி மாணவர்கள், பெண்கள் மற்றும் பொதுமக்கள் பல்வேறு இன்னல்களையும் பாதுகாப்பு அச்சத்தையும் எதிர்கொண்டு வருவதால், அப்பகுதி பொதுமக்கள் கையொப்பமிட்டு அளித்த மனுக்களை இணைத்து, இந்த இரு கடைகளின் நிலையையும் விதிமுறைகளின்படி ஆய்வு செய்து உடனடியாக அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், ஈரோடு மாவட்டம் முழுவதும் செயல்பட்டு வரும் அனைத்து டாஸ்மாக் கடைகளையும் முழுமையாக ஆய்வு செய்து, அவை அனைத்தும் பள்ளி, கல்லூரி, மருத்துவமனைமற்றும்கோவில்களில் இருந்து குறைந்தபட்சம் 500 மீட்டர்தொலைவிற்குஅப்பாற்பட்டு மட்டுமே செயல்படுகின்றனவா என்பதை உறுதி செய்ய வேண்டும் என்றும், விதிமுறைகளை மீறி செயல்படும் கடைகளை உடனடியாக இடமாற்றம் செய்யவோ அல்லது முற்றிலும் அகற்றவோ தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அந்த மனுவில் வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்த நிகழ்வின் போது உடன் பிரகாஷ், சின்னத்துரை, கார்த்திக், விவேக், நாராயணசாமி, தேவராஜ், பாலமுருகன் உட்பட பலர் இருந்தனர்.



# நாகர்கோவில் ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

நாகர்கோவில், ஜூலை. 21

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில்கூட்டரங்கில், மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் தலைமையில், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நேற்று நடைபெற்றது. இன்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், பொது மக்களிடமிருந்து கல்வி உதவித்தொகை, பட்டா பெயர் மாற்றம், மாற்றுத்திறனாளி நல உதவித்தொகை, முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை, குடிநீர் வசதி, சாலை வசதி உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் கோரி 530 கோரிக்கை மனுக்கள் இன்று பெறப்பட்டது. பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட அனைத்து கோரிக்கை மனுக்கள் மீது விரைந்து தீர்வு காணுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் துறைசார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள். முன்னதாக மாற்றுத்திறனாளிகளின் கோரிக்கைகளுக்கு எளிதில் தீர்வு காணும் நோக்கில் ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமை மாற்றுத்திறனாளிகள் சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வைத்து நடைபெற்று வருகிறது. அதனடிப்படையில் நடைபெற்ற கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் மாற்றுத்திறன் பயனாளிகளின் கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார்கள். நடைபெற்ற கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் எம்.வேலுமணி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் நிலம் பத்மபிரியா, தனித்துணை ஆட்சியர் சமூகபாதுகாப்பு திட்டம் சரவணன், துறை அலுவலர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

# சேலத்தில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்



சேலம், ஜூலை 21

சேலம் ஆட்சியர் அலுவலகத்தில் நேற்று திங்கள் கிழமை மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் நடைபெற்றது. பொது மக்களிடம் இருந்து பெறப்படும் மனுக்களுக்கு உடனுக்குடன் தீர்வு காணவும் , அவர்களின்அடிப்படைதேவைகளுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்றும், பெண்களின் முன்னேற்றத்திற்கு தேவையான நடவடிக்கைகள் உடனுக்குடன் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், பொதுமக்களுக்கான பணியில் அரசு அலுவலர்கள் ஒருங்கிணைந்து விரைந்து செயல்பட வேண்டும். பொது மக்களின் மனுக்களுக்கு விரைந்து தீர்வு வழங்கப்படுவதை அரசு அலுவலர்கள் உறுதி செய்திட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டது. அந்த அடிப்படையில் இன்று பொது மக்களிடம் இருந்து பெறப்பட்ட 485 மனுக்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர் உத்தரவிட்டார். மேலும் மாற்றுத்திறனாளிகள் சிரமம் இல்லாமல் மனுக்களை மாவட்ட ஆட்சியர் அலுவலக தரைதளத்தில் வழங்க மாற்றுத்திறனாளிகளுக்கான குறைதீர்க்கும் முகாம் நடத்தப்பட்டது. அதில் 19 மனுக்களை பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ள தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. இதில் மாற்றுத்திறனாளிகள் நல வாரியத்தின் சார்பில் தலா ரூ.2.00 இலட்சம் வீதம் விபத்தில் மரணம் அடைந்த 13 மாற்றுத் திறனாளிகளின் குடும்பத்தினருக்கு ரூ 26.00 இலட்சம் மதிப்பில் விபத்து நிவாரண நிதி உதவியும், முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் கீழ் 18 மாற்றுதிறனாளிகளுக்கு ரூ 29.44 இலட்சம் மதிப்பில் நவீன செயற்கை கால்கள் மற்றும் 3 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ. 750 மதிப்பில் காதோலி கருவிகள் என மொத்தம் ரூ 55.45 இலட்சத்தில் நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் இளம் பகவத் வழங்கினார்.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் ச.கந்தசாமி மாற்றுத்திறனாளிகளிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெற்று, குறைகள் கேட்டறிந்தார்.



சேலத்தில் நடைபெற்ற தமிழக வெற்றி கழக இணைவு நிகழ்ச்சியில், போக்குவரத்துத்துறை அமைச்சர் விஜய் தமிழன் பார்த்திபன் முன்னிலையிலும், கட்சியின் பொதுச்செயலாளர் ஆனந்த் தலைமையிலும், டாக்டர் கே.கே. கோகுல் சார்பில் மாற்றுக் கட்சிகளைச் சேர்ந்த 5,000க்கும் மேற்பட்டோர் த.வெ.க.வில் இணைந்தனர். இந்நிகழ்ச்சியில் பொதுச்செயலாளர் ஆனந்திற்கு செங்கோல் வழங்கி கவுரவிக்கப்பட்டார்



தருமபுரி ஸ்ரீ சக்தி சொர்ணமுத்து மாரியம்மன் திருக்கோவிலில் உள்ள

# வள்ளி தெய்வானை உடனாகிய ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி திருக்கல்யாணம் வைபவம்

தருமபுரி ஜூலை 21

தருமபுரி நகர எஸ். வி. ரோடு குப்பையன் தெருவில் அமைந்துள்ள ஸ்ரீ சக்தி சொர்ணமுத்து மாரியம்மன் திருக்கோவிலில் உள்ள ஸ்ரீ வள்ளி, ஸ்ரீ தெய்வானை உடனாகிய ஸ்ரீசிவசுப்பிரமணிய சுவாமி திருக்கல்யாண வைபவத்தை முன்னிட்டு அதிகாலையில் சுவாமிக்கு சிறப்பு அபிஷேகங்கள், ஆராதனைகள், தீபாரதனைகள் நடைபெற்றது. இதை தொடர்ந்து ஊர் பொதுமக்கள் சார்பில் வளையல், மாங்கல்ய கயிறு, குங்குமம், மஞ்சள், விபூதி, பழங்கள்மற்றும்வெள்ளம், வருகடலை ஆகியவைகளை சீர்வரிசையாக எடுத்து ஊர்வலமாக வந்தனர். பிறகு கணபதி ஹோமம் , தீபாரதனைகள் செய்யப்பட்டு ஸ்ரீ வள்ளி, ஸ்ரீ தெய்வானை சமேத ஶ்ரீ சிவசுப்பிரமணியசாமி திருக்கல்யாண வைபவம் வெகு விமர்சையாக நடைபெற்றது. இதில் நகர பகுதியில் உள்ளபக்தர்கள், பொதுமக்கள்திரளாககலந்துகொண்டு சாமி தரிசனம் செய்தனர். திருக்கோவில் சார்பில் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

மார்த்தாண்டம் அருகே

# சிறுமிக்கு பாலியல் வன்கொடுமை குற்றவாளிக்கு 27 வருடம் சிறை



நாகர்கோவில், ஜூலை. 21

குமரி மாவட்டத்தில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்ற வழக்குகளில் விரைவில் விசாரணை முடித்து குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்வதையும் அவ்வழக்குகளில் நீதிமன்ற விசாரணையை கண்காணித்தல், பாதிக்கப்பட்டவர்களுக்கு பாதுகாப்பு அளித்தல் ஆகிய செயல்பாடுகள் மூலம் குற்றவாளிக்கு தண்டனை பெற்றுத்தருவதை உறுதி செய்ய வேண்டும் என மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

இந்நிலையில் கடந்த 2018 ஆம் ஆண்டு 17 வயது சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்த குற்றத்திற்காக மார்த்தாண்டத்தை அடுத்த தோனிக்குழி பகுதியை சேர்ந்த பில்லாளன் என்பவரின் மகன் முருகன் (35) என்பவரை கைது செய்த மார்த்தாண்டம் அனைத்து மகளிர் காவல் நிலைய போலீசார் போக்சோ பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணை செய்து குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு விசாரணை நாகர்கோவில் போக்சோ நீதிமன்றத்தில் நடந்து வந்தது. இந்நிலையில் நீதிபதி இக்குற்றத்தில் ஈடுபட்ட குற்றவாளிக்கு 27 வருடம் சிறை தண்டனை மற்றும் 7000 ரூபாய் அபராதம் விதித்து தீர்ப்பு அளித்தார்கள்.

இந்த நீதிமன்ற வழக்கு விசாரணை மற்றும் சாட்சிகள்விசாரணை ஆகியவற்றில்சிறப்பாகசெயல்பட்டு குற்றவாளிகளுக்கு தண்டனை வாங்கித் தர காரணமாக இருந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரிகள், அரசு வழக்கறிஞர், நீதிமன்ற காவலர் இந்த வழக்கின்நீதிமன்றவிசாரணையைமுறையாககண்காணித்த குளச்சல் உட்கோட்ட துணை காவல் கண்காணிப்பாளர், குளச்சல் அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் ஆகியோரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் வெகுவாக பாராட்டினார்.

சேலம் மாவட்டத்தின் விளை நிலங்கள் வழியாக

# மின் கோபுரங்கள் அமைக்கும் திட்டம் மறுபரீசீலனை செய்யுமாறு மனு




சேலம், ஜூலை 21

அரியலூர் (கள்ளக்குறிச்சி) கௌதம் பாளையம் (திருப்பூர்) இடையே 765 கிலோ வாட் உயர் அழுத்த மின் கோபுரங்கள் அமைக்கும் திட்டத்தினை விளை நிலங்களின் வழியாக அமைக்கப்படுவதால் விவசாயிகள் விவசாயம் செய்வது பாதிக்கப்படும் என்றும் மின் கோபுரம் அமைப்பதற்கு பதில் நிலங்களின் அடியில் மின்சார ஒயர்கள்(கேபிள்கள்) அமைக்கும் திட்டத்தை செயல்படுத்தலாம் என்றும் நிலங்களின் உள்ளே மின் கோபுரங்களை அமைப்பதால் சேலம் மாவட்ட விவசாயிகளின் விவசாயம் பாதிப்படையும் என்பதை வலியுறுத்தி சேலம் மாவட்ட விவசாயிகள் மற்றும் விளை நில உரிமையாளர்கள் சார்பாக மனு அளிக்கப்பட்டது.

# சக்ஷம் திட்டம் மூலம் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு முதலீட்டு விழிப்புணர்வு



சென்னை, ஜூலை 21

அசோசியேஷன் ஆஃப் மியூச்சுவல் ஃபண்ட்ஸ் ஆஃப் இந்தியா அமைப்பு, மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்களுக்கு முதலீட்டு விழிப்புணர்வை வழங்கி அவர்களை மேம்படுத்துவதற்காக, முதல் முறையாக 'சக்ஷம்' திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

'மியூச்சுவல் ஃபண்ட்ஸ் சஹி ஹை' பிரச்சாரத்தின் கீழ் இந்த சக்ஷம் திட்டம், வறுமை கோட்டுக்கு கீழ் அளவில் உள்ள பெண்களின் பொருளாதார திறனை வெளிக்கொணரும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்தத் தொடக்க விழாவை 'தமிழ்நாடு ஊரக இன்குபேஷன் மற்றும் ஸ்டார்ட் அப் எனேப்லர்' அமைப்பு நடத்தியது. இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு ஊரக உருமாற்றத் திட்டத்தின் முதன்மைச் செயல்பாட்டு அதிகாரியும் டி .என்.ரைஸ் ன் தலைமைச் செயல் அதிகாரியுமான வி. ஆர். சுப்புலட்சுமி , சந்தைப்படுத்தல் மற்றும் முதலீட்டாளர் கல்விப் பிரிவு துணைத் தலைவர் மம்தா முதலியார் வைத்யா ஆகியோர் பங்கேற்றனர்.

தமிழ்நாடு மற்றும் கேரளா முழுவதும் தொடங்கும் இந்த 'சக்ஷம்' திட்டம், நீண்ட கால பொருளாதார உருவாக்கத்தை ஊக்குவிப்பதையும், உள்ளூர் சமூகங்களுக்குள் விழிப்புணர்வுடன் கூடிய முதலீட்டு கலாச்சாரத்தை வளர்ப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்நிகழ்ச்சியின் தொடக்க விழாவில் பேசிய வி.ஆர். சுப்புலட்சுமி, ,"தமிழ்நாட்டில் அடிமட்ட அளவிலான பொருளாதார மாற்றத்திற்கு மகளிர் சுயஉதவிக் குழுக்கள் நீண்டகாலமாக முதுகெலும்பாக இருந்து வருகின்றன. நமது பெண்கள் தங்களுடைய கூட்டு வலிமையின் மூலம் நிறுவனங்கள், சேமிப்புகள் மற்றும் வாழ்வாதாரங்களை உருவாக்கியுள்ளனர். சக்ஷம் திட்டம் இந்த பயணத்தை சேமிப்பதில் இருந்து முதலீடு செய்வதை நோக்கி ஒரு படி மேலே எடுத்துச் செல்கிறது. சுயஉதவிக் குழு உறுப்பினர்களுக்கு முறையான முதலீட்டாளர் கல்வி மற்றும் நேரடி ஆதரவிற்கான வாய்ப்பை வழங்குவதன் மூலம், இத்திட்டம் அவர்கள் கஷ்டப்பட்டு சம்பாதித்த சேமிப்பை முறையான முதலீட்டு வழிகளில் செலுத்தவும், அவர்களுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் நீண்ட கால நிதிப் பாதுகாப்பை உருவாக்க உதவும்," என்று கூறினார்.



# தருமபுரி நகராட்சி 21 வது வார்டு பொதுமக்கள் அடிப்படை வசதிகள் வேண்டி ஆட்சியரிடம் மனு

தருமபுரி ஜூலை 21

தருமபுரி நகராட்சி 21 வது வார்டுக்கு உட்பட ஆஞ்சநேயர் கோவில் தெருவில் அடிப்படை வசதிகள் அமைத்து தர கோரி மாவட்ட ஆட்சியரிடம் பொதுமக்கள் மனு அளித்தனர் .

இந்த மனுவில் கூறியதாவது: தருமபுரி நகராட்சி க்கு உட்பட்ட 21 வது வார்டு ஆஞ்சநேயர் கோவில் தெருவில் வசித்து வரும் பொதுமக்கள் ரோடு வசதி அமைக்க அரசிடம் இடம் ஒப்படைத்து உள்ளார்கள். இதுபோக பூங்கா அமைக்க 2,000 சதுர அடி நிலம் அரசிடம் ஒப்படைத்து உள்ளார்கள். இவை அனைத்தும் தந்தும் இதுவரை அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. பொதுமக்கள் பலமுறை மனு கொடுத்தும் இது வரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதுபோக மழை காலங்களில் மழை நீர் சாலையில் தேங்கி நிற்பதால் கொசுக்கள், விஷப்பூச்சிகள், பாம்புகள் அதிகம் நடமாவதால் பொதுமக்கள், பெரியவர்கள், சிறியவர்கள் அச்சப்படுகின்றனர் . எனவே சாலையை சீர் செய்து தெருவில் இரவு நேரங்களில் மின்விளக்குகள் அமைத்து தரவேண்டும். குண்டும் குழியுமாக உள்ள சாலையை சீரமைத்து தர வேண்டும். பாதாள சாக்கடை அமைத்து தர வேண்டும். குடிநீர் தண்ணீர் எடுக்க சிறிது தொலைவில் சென்று எடுத்த வருவதால் குடிநீர் இணைப்புகள் அமைத்து தர வேண்டும் ஆகிய வசதிகளை செய்து தர வேண்டும் என்று மனுவில் கூறியுள்ளனர்

# குமரியில் நகை திருடிய பொள்ளாச்சியை சேர்ந்த 2 பெண்கள் கைது



மார்த்தாண்டம், ஜூலை. 21

தக்கலையை அடுத்த திருவிதாங்கோடு பகுதியை சேர்ந்தவர் மரிய அஞ்சலி (66). கடந்த 3 வாரங்களுக்கு முன்பு அரசு பஸ்ஸில்பயணம்செய்தார். அப்போது வேர்கிளம்பி அருகே அவரது 6 பவுன் தங்கச் சங்கிலி திருட்டு போனது. இது குறித்து மரிய அஞ்சலி திருவட்டாறு போலீசில் புகார் செய்தார். போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வந்தனர்.

இந்த நிலையில் பஸ் நிறுத்தங்களில் உள்ள சிசிடிவி கேமராவில் பதிவான காட்சிகளை போலீசார் ஆய்வு செய்தனர். அப்போது 2 பெண்கள் நகை திருட்டில் ஈடுபட்டது தெரிய வந்தது. தொடர்ந்து அவர்களை பல்வேறு இடங்களில் போலீசார் தேடி வந்தனர்.

அப்போது வேர்கிளம்பியில் வைத்து இரண்டு பெண்களையும் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் சிவசங்கர் மடக்கி பிடித்தார். அதைத் தொடர்ந்து இரண்டு பெண்களிடம்போலீசார்பலகட்டமாக கிடிக்கிப்பிடி விசாரணை நடத்தினார். இந்த விசாரணையில் அவர்கள் பொள்ளாச்சி கொடிக்கால் பாளையத்தை சேர்ந்த ஈஸ்வரி (44), லட்சுமி (40)என்று தெரிய வந்தது. நகையை விற்று பணத்தை செலவு செய்தது விசாரணையில் தெரிந்தது. செலவு செய்தது போக ரெண்டு பேரிடம் மீதி இருந்த பணம் ரூ 21 ஆயிரத்தை பறிமுதல் செய்தனர். பின்னர் இரண்டு பெண்களையும் போலீசார் கைது செய்து, தொடர்ந்து அவர்களை கோர்ட்டில் ஆயர்படுத்தி மாஜிஸ்திரேட் உத்தரவின் பேரில் ஈஸ்வரி, லட்சுமி ஆகியோர் சிறையில் அடைக்கப்பட்டனர்.



தருமபுரி மாவட்ட தொடக்க கூட்டுறவு வங்கி அனைத்து பணியாளர்கள் சங்கம் சார்பில்

# 13 அம்ச கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி ஆர்ப்பாட்டம்

தருமபுரி ஜூலை 21

தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே தமிழ்நாடு மாநில தொடக்க கூட்டுறவு வங்கி அனைத்து பணியாளர்கள் சங்கத்தின் தருமபுரி மாவட்ட சார்பில் 13 அம்ச கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்டத் தலைவர் அன்பழகன் தலைமை தாங்கினார். ஆர்ப்பாட்டத்திற்கு மாநில பொருளாளர் செந்தில்குமார், மாவட்ட செயலாளர் முருகேசன் வரவேற்பு உரையாற்றினார்கள். மாவட்டத் துணைத் தலைவர்கள் கோவிந்தரசு, துரை ராசு, போராட்டக் குழு தலைவர் ஸ்டாலின் மணி குமார், போராட்டக் குழு செயலாளர் ராம்ராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் நியாயவிலை கடைகளின் மூலம் செயல்படுத்தி வரும் தாயுமானவர் திட்டத்தினை மறுபரிசீலனை செய்ய வேண்டும். பெரும்பாலானஇடங்களில்விற்பனையாளர்களாக மகளிர், மாற்றுத் திறனாளிகள் மற்றும் 50 வயதுக்கு மேற்பட்டோர் பணிபுரிந்து வருவதால் இவ்வாறான பணிகளை இத்திட்டத்தில் இருந்து விடுவிக்க வேண்டும். அனைத்து ரேஷன் கடைகளிலும் இத்திட்டத்தை அமல்படுத்துவதற்கு பதிலாக ஒன்றிய அளவில் பயனாளிகளை தேர்வு செய்து அவர்களுக்கு மட்டும் விநியோகம் செய்திட அரசே வாகன வசதி ஏற்படுத்தி அதற்கான பணியர்களையும் நியமனம் செய்து திட்டத்தை அமல்படுத்த வேண்டும்.

தற்போது பணி ஓய்வு பெற்றவர்கள் பெரும் கருணைத்தொகை ரூபாய் ஆயிரம் உயர்த்தி மைய வங்கி பணியாளர்களுக்கு இணையாக வழங்க வேண்டும் உள்ளிட்ட 13 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதில் 500 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

# குமரி மலையோர கிராமம் மோதிரமலை சந்திப்பில் காட்டுயானை அட்டகாசம்



மார்த்தாண்டம் ஜூலை 21

கன்னியாகுமரி மாவட்ட மலையோர பகுதிகளில் பழங்குடியினமக்கள்வாசிக்கும் குடியிருப்பு பகுதிகள் ஏராளம் உள்ளது. இங்கு கடந்த சில மாதகளாக காட்டு யானைகள் புகுந்து பொதுமக்களை அச்சுறுத்தி வருகிறது. மேலும் பயிர் வகைகளை சேதப்படுத்துவதும், உயிரிழப்பு சம்பவங்களும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. வனத்துறையினர் இது சம்பந்தமாக நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில் மோதிரமலை சந்திப்பு பகுதியில் பாலசந்திரன் (80) என்பவர் வாடகை வீட்டில் வசித்து வருகிறார். அந்த வீட்டில் மளிகை கடையும் நடத்தி வருகிறார். நேற்று முன்தினம் இரவு காட்டுயானை ஒன்று கடைக்குள் புகுந்து சேதப்படுத்தியது. யானை கடையின் கூரையையும், ஜன்னல்களையும் உடைத்து உள்ளே நுழைந்து, அங்கு வைக்கப்பட்டிருந்த அரிசியை சாப்பிட்டதுடன், பல்வேறு உபயோகப் பொருட்களையும் சேதப்படுத்தியதாக கூறப்படுகிறது. உடனடியாக பாலசந்திரனும், அவரது மனைவி வீரம்மாள் என்பவருமாக யானையை துரத்த முயன்றனர். ஆனால் யானை அவர்களை திருப்பி துரத்தியதால் கணவனும், மனைவியும் தப்பி ஓடினர். இதை கண்ட பக்கத்து வீட்டு காரர் மணி என்பவர் யானையை துரத்த முயன்ற போது, அவரையும் யானை துரத்தியது. இதையடுத்து இரவில் சத்தம் கேட்டு காணி இன பழங்குடி மக்கள் அந்த பகுதியில் குவிந்தனர். பின்னர் தீ கொளுத்தி, சத்தமிட்டு யானையை அங்கிருந்து துரத்தி அடித்தனர். அதன்பிறகு மக்கள் இரவு முழுவதும் தூங்காமல் அச்சத்துடன் காணப்பட்டனர். இது குறித்து நேற்று காலை வனத்துறை அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. வனத்துறை அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு வந்து பார்வையிட்டு மேலும் காட்டு யானைகள் அந்த பகுதியில் வர முடியாத அளவில் தடுப்பு நடவடிக்கைகள் எடுத்து வருகின்றனர்.

இந்த சம்பவத்தால் அப்பகுதி மக்கள் அச்சமடைந்துள்ளனர். காட்டுயானையின் நடமாட்டம் தொடர்ந்து காணப்படுவதால், வனத்துறையினர் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்துக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம். என அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

# தூத்துக்குடி பனிமய மாதாவின் திருத்தலப் பேராலயத்தின் 444ஆவது ஆண்டுப் பெருவிழா

## வரும் 26ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கவுள்ளது



தூத்துக்குடி, ஜூலை 21

தூத்துக்குடி பனிமய மாதாவின் திருத்தலப் பேராலயத்தின்444ஆவது ஆண்டுப் பெருவிழா வரும் 26ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் விமரிசையாகத் தொடங்கவுள்ளது.தூத்துக்குடி மாநகரின் அடையாளமாகவும், தமிழ்நாட்டில் திருத்தந்தையால் அங்கீகரிக்கப்பட்ட 10 பேராலயங்களில் ஒன்றாகவும் திகழும் பரிசுத்த பனிமய மாதா திருத்தலப் பேராலயத்தின் 444ஆவது ஆண்டுப் பெருவிழா வரும் ஜூலை 26 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் விமரிசையாகத் தொடங்கவுள்ளது. இப்பெருவிழாவானது ஜூலை 26 ஞாயிற்றுக்கிழமை தொடங்கி ஆகஸ்ட் 05 புதன்கிழமை வரை தொடர்ந்து நடைபெறவுள்ளது. ஜூலை 26ஆம்தேதி தூத்துக்குடி ஆயர் மேதகு ஸ்டீபன் ஆண்டகை கொடியேற்றி இவ்விழாவினைத் தொடக்கி வைக்கவுள்ளார். இத்தொடக்க விழாவில் ஆயர்கள், குருக்கள், இறைமக்கள், அரசியல் தலைவர்கள், அரசு அதிகாரிகள் கலந்து கொள்ள உள்ளனர். ஆகஸ்ட் 2 (ஞாயிறு) குழந்தைகளுக்கான புதுநன்மைத் திருப்பலி நடைபெறும். அன்று மாலையில் நகரின் முக்கிய வீதிகளில் திரளான இறைமக்கள் பங்கேற்கும் திவ்விய நற்கருணைப் பவனி நடைபெறும். ஆகஸ்ட் 4 (செவ்வாய்) மாலை தூத்துக்குடி ஆயர் ஸ்டீபன் தலைமையில் மாலை ஆராதனையும், கோட்டாறு மறைமாவட்ட ஆயர் மேதகு நசரேன் சூசை மறைவுரையும் நடைபெறும். ஆகஸ்ட் 5 புதன்கிழமை (பெருவிழா கூட்டுத் திருப்பலி) ஆயர் ஸ்டீபன், உபகாரிகளுக்கான திருப்பலியை மேனாள் ஆயர் இவோன் அம்புரோஸ் ஆண்டகை ஆகியோர் கூட்டுத் திருப்பலியாக நிறைவேற்றிச் சிறப்பிப்பர். அன்னையின் பெருவிழா ஏற்பாடுகளை ஆலய அதிபர் மற்றும் பங்குத்தந்தை ஜான் செல்வம், உதவிப் பங்குத்தந்தையாக ஜெரால்டு, நிர்வாகக் குழுவின் துணைத் தலைவர் அண்டோ, செயலாளர் எட்வின் பாண்டியன், குழுவின் பொருளாளர் ஜோ சோரிஸ், துணைச்செயலாளர்பெனாட் ஆகியோர் மேற்கொண்டு வருகின்றனர்.

## நாகர்கோவிலில்

# ஆல் இந்தியா பியூட்டி அசோசியேஷன் சார்பில் அழகு கலை பயிற்சி




நாகர்கோவில் ஜூலை 21

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் ஆல் இந்தியா பியூட்டி அசோசியேஷன் சார்பில் அழகு கலை பயிற்சி நடைபெற்றது,இந்த பயிற்சியில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து பெண்கள் வருகை தந்தனர்,சினிமா நட்சத்திரங்களை அழகு படுத்தும் கலைஞர்கள் இந்த பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டு மாணவர்களுக்கு பயிற்சி அளித்தனர், அதேபோன்று ஆல் இந்தியா பியூட்டி அசோசியேஷன் சங்கத்தில் புதிதாக தேர்வான நிர்வாகிகள் பதவி ஏற்றுக்கொண்டனர்,அதனை தொடர்ந்து தமிழ்நாடு தலைவர்.மினி செயியாளிடம் கூறுகையில்"

இந்த அழகு கலை பயிற்சியை பயில்வதற்கு உள்ளூரில் இருந்து சென்னை, பெங்களூர் போன்ற பெரு நகரங்களுக்கு சென்று பயிற்சி கற்றுக் கொண்டு இருந்து வந்தனர், அதில் பல சிரமங்கள் இருந்தது அதனை எளிமைப்படுத்தும் வகையிலும் உள்ளூர்க்ளில் அழகு கலைஞர்களின் வசதிகளுக்காக சிறந்து விளங்கும் பயிற்சியாளர்களை கொண்டு இந்த வகுப்பு நடைபெற்றது, உலகத்தரம் வாய்ந்த கலைஞர்களை அழைத்து வந்து குறைந்த கட்டணத்துடன் பயிற்சி அளித்து வருகிறோம், பெண்கள் தொழில்நுட்பத் துறையில் சம்பாதிப்பதை விட அழகுக்கலையில் வருவாயை அதிகம் ஈட்டி வருகின்றனர், கார்ப்பரேட் கம்பெனியில் இருப்பவர்கள் கூட அந்த வேலையை விட்டு மேக்கப் கோர்ஸ் கற்று நிபுணத்துவம் ஆகிவிடுகின்றனர், கடந்த காலங்களில் அழகு கலை சான்றிதழ் வாங்க பல்வேறு சிரமங்கள் இருந்தது ஆனால் தற்போது உயர் கம்பெனிகளுடன் இணைந்து சான்றிதழ்களை தங்களின் சங்கத்தின் மூலமாக வழங்கி வருகிறோம் அதேபோன்று அழகு கலையை கற்றுக் கொள்ள அரசு மானியம் வாங்குகிறது அது பல கலைஞர்களுக்கு தெ ரியாது, அவர்களுக்கு அதன் மூலம் கிடைக்கக்கூடிய மானியத்தை

பெற்றுக் கொடுக்கவும் இச் சங்க உதவி செய்து வருகிறது மேலும் அனைத்து தர மக்களுக்கும் அழகுக் கலையை கற்றுக் கொடுப்பதும் ஏழை பணக்காரர் என்று இல்லாமல் அனைவருக்கும் ஒரே விதமான மதிப்பீட்டில் அழகு நிலையங்களை நடத்தி வருகிறோம் மேலும் அரசு அமைப்புசாரா துறையில் ஒன்றிணைந்து அழகு கலை கலைஞர்களுக்கு பணபலன்கள் கிடைக்க கோரிக்கை வை த்துள்ளதாக தெரிவித்தார்.அதனைத் தொடர்ந்து பாராட்டு விழா நடைபெற்றது. இதில் 200க்கும் மேற்பட்ட அழகு கலை நிபுணர்கள் கலந்து கொண்டனர்

## அஞ்சுகிராமம் அருகே

# 60 அடி பள்ளத்தில் பைக் விழுந்து 2 வாலிபர்கள் பலி





நாகர்கோவில், ஜூலை. 21

கன்னியாகுமரியை அடுத்த அஞ்சுகிராமம் அருகேயுள்ள மருங்கூர் பகுதியை சேர்ந்தவர் முத்துகிருஷ்ணன் மகன் டிராவிட் ( 22) பிஎஸ்சி பட்டம் பெற்றவர். நெல்லை மாவட்டம் கூடங்குளத்தில் எலக்ட்ரீசியன் ஆக வேலை செய்து வந்தார். மருங்கூர் பகுதியை சேர்ந்தவர் ராமன் மகன் நாகராஜன் (22). இவர் இன்ஜினியரிங் முடித்துள்ளார். தற்போது வேலை தேடி வந்துள்ளார்.

டிராவிட், நாகராஜன் இரண்டு பேரும் நண்பர்களாவார்கள். இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு நாகராஜன் தனது நண்பருடைய விலை உயர்ந்த பைக்கில் நாகராஜன், ட்ராவிட் ஆகியோர் இரவிபுதூரிலிருந்து மயிலாடி நோக்கி சென்று கொண்டிருந்தனர். பைக்கை நாகராஜன் ஓட்டினார். டிராவிட் பின்னர் அமர்ந்திருந்தார்.

அப்போது மயிலாடி அருகே நாச்சியார் குளம் என்ற இடத்திற்கு சென்ற போது திடீரென நிலை தடுமாறிய பைக் தறிகெட்டு ஓடி, அங்குள்ள 60 அடி பள்ளத்தில் விழுந்தது. பள்ளத்தில் தண்ணீரும் இருந்துள்ளது. பைக்கில் இருந்து விழுந்ததில் இரண்டு பேரும் பலத்த காயம் அடைந்தனர்.

இதை அடுத்து அந்த வழியாக வந்தவர்கள் 2 வாலிபர்களின் சத்தம் கேட்டு, உடனடியாக கன்னியாகுமாரி தீயணைப்பு நிலையம் மற்றும் அஞ்சு கிராமம் காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவித்தனர். சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற தீயணைப்பு படை வீரர்கள் 60 அடி பள்ளத்துக்குள் கிடந்த வாலிபர்களை மீட்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

இதற்கிடையே அந்த பகுதி இருள் சூழ்ந்து காணப்பட்டதால், அதிக வெளிச்சம் கொண்ட லைட் கொண்டுவரப்பட்டு, மீட்பு பணி நடைபெற்றது. இதை அடுத்து தீயணைப்பு இவர்கள் 2 வாலிபர்களை மீட்டுனர். பின்னர் போலீசார் 2 பேரையும் ஆம்புலன்ஸ் மூலம் குமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு பரிசோதித்த டாக்டர்கள் டிராவிட், நாகராஜன் ஆகியோர் ஏற்கனவே இறந்து விட்டதாக கூறினர். இந்த சம்பவம் குறித்து அஞ்சுகிராமம் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தூத்துக்குடியில் மறியலில் ஈடுபட்ட கீதா ஜீவன் உள்பட 245 பேர் கைது



தூத்துக்குடி, ஜூலை 21

விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் மார்க்கண்டேயன் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து தூத்துக்குடியில் மறியலில் ஈடுபட்ட முன்னாள் அமைச்சர் கீதா ஜீவன் உள்பட திமுகவினர் 245 பேரை போலீசார் கைது செய்தனர். தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தமிழக முதல்வரை அவதூறாகப் பேசியதாக விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் மார்க்கண்டேயன் போலீசாரால் கைது செய்யப்பட்டார். அவர் தூத்துக்குடியில் உள்ள மாவட்ட குற்றப்பிரிவு அலுவலகத்தில் வைக்கப்பட்டு இன்று காலை முதல் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப் ப ட் ட ா ர் . எம்எல்ஏவிடம் விசாரணை நடக்கும் விபரமறிந்து, திமுக வடக்கு மாவட்ட செயலாளர் கீதா ஜீவன், கோவில்பட்டி எம்எல்ஏ கருணாநிதி ஆகியோர் தலைமையில் ஏராளமான திமுகவினர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் குவிந்தனர். அங்கு பாதுகாப்புப் பணியில் இருந்த போலீசார் திமுகவினரைச் சமாதானப்படுத்தி அனுப்ப மு யன் ற ன ர் . இதையடுத்து, கலைந்து செல்ல மறுத்த திமுகவினர் தூத்துக்குடி திருநெல்வேலி நெடுஞ்சாலையில் உள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலக நுழைவாயில் முன்பு திரண்டு அதிரடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது அங்கு வந்த தூத்துக்குடி ஊரக டிஎஸ்பி சுகிர் தலைமையிலான போலீசார், இந்த ஆர்ப்பாட்டத்திற்கு அனுமதி இல்லை எனக் கூறி அனைவரையும் கலைந்து செல்லுமாறு உத்தரவிட்டனர். இதனால் போலீசாருக்கும் திமுகவினருக்கும் இடையே கடுமையான வாக்குவாதமும் தள்ளுமுள்ளும் ஏற்பட்டது. இதன் காரணமாக இப்பகுதியில் போக்குவரத்து கடுமையாகப் பாதிக்கப்பட்டது. போலீசாரின் எச்சரிக்கையையும் மீறி, மாவட்ட செயலாளர் கீதா ஜீவன் தலைமையில், கோவில்பட்டி எம்எல்ஏ கருணாநிதி, மாநகரச் செயலாளர் ஆனந்த சேகரன், புதுர் மத்திய ஒன்றியச் செயலாளர் ராதாகிருஷ்ணன், மாவட்ட மகளிர் அணிச் செயலாளர் கவிதா உட்பட ஏராளமான திமுகவினர் தூத்துக்குடி திருநெல்வேலி பிரதான சாலையில் திடீரென தரையில் அமர்ந்து சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதைத் தொடர்ந்து கூடுதல் காவல் கண்காணிப்பாளர் செல்வராஜ் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து மறியலில் ஈடுபட்டவர்களிடம் சமாதான பேச்சுவார்த்தை நடத்தினார். இந்த பேச்சுவார்த்தையில் எவ்வித உடன்பாடும் ஏற்படாததால், மறியல் போராட்டம் நடத்திய அனைவரையும் போலீசார் கைது செய்தனர். இப்போராட்டத்தில் ஈடுபட்டதாக மாவட்ட செயலாளர் கீதா ஜீவன் தலைமையில் 25 பெண்கள் உட்பட மொத்தம் 245 பேரைப் போலீசார் கைது செய்து, மடத்தூரில் உள்ள ஒரு தனியார் சொந்தமான திருமண மண்டபத்தில் பலத்த பாதுகாப்புடன் தங்க வைத்துள்ளனர். கோவில்பட்டியில் மறியல் கோவில்பட்டி கிழக்கு நகரச் செயலாளர் சுரேஷ் தலைமையில் திரண்ட ஏராளமான திமுகவினர், மார்க்கெட் மெயின் ரோடு பகுதியில் அமைந்துள்ள தமிழரசன் படிப்பகம் முன்பாகத் திடீரென சாலையில் அமர்ந்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். தகவல் அறிந்து கோவில்பட்டி டிஎஸ்பி தலைமையிலான போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தனர். போக்குவரத்திற்கு இடையூறாகப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களைக் கலைந்து செல்லுமாறு போலீசார் அறிவுறுத்தினர். இருப்பினும் கலைந்து செல்ல மறுத்துப் போராட்டத்தில் ஈடுபட்டதால், 9 பெண்கள் உட்பட மொத்தம் 35 திமுகவினரைக்காவல்துறையினர்கைது செய்தனர். கைது செய்யப்பட்ட அனைவரும் அப்பகுதியில் உள்ள ஒரு தனியார் திருமண மண்டபத்தில் பலத்த போலீஸ் பாதுகாப்புடன் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

# ஓசூரில் நடைபெற்ற காங்கிரஸ் கட்சியின் மக்கள் சேவகன் திட்ட துவக்க விழா



கிருஷ்ணகிரி, ஜுலை 21

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் ஓசூரில் இளைஞர் காங்கிரஸ் கட்சி சார்பில் மக்கள் சேவகன்" திட்டம் தொடக்க விழா நடைபெற்றது இளைஞர்காங்கிரல் கட்சியின் மாநில ஒருங்கிணைப்பாளர் பிரவீன் குமார் தலைமையில் தலைமையில் நடைப்பெற்ற கூட்டத்தில் காமராஜ் காலனியில் அமைந்துள்ள கர்மவீரர் காமராஜரின் திருவுருவ சிலைக்கு காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இதனைத் தொடந்து நடைப்பெற்ற இந்த கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாராக இளைஞர் காங்காங்கிரஸ் கட்சியின் தேசிய செயலாளர் ஶ்ரீனிவாசன் கலந்துக் கொண்டு மக்கள் சேவகன்' என்ற புதிய திட்டத்தினை அறிமுகப்படுத்தி வைத்து எதிர்கட்சி தலைவர் ராகுல் காந்தியின் எழுச்சியையும், புதிய மாநிலத் தலைவரின் செயல்பாடுகளையும் கண்டு ஏராளமான இளைஞர்கள் காங்கிரஸ் கட்சியில் புதியதாக இணைந்தவர்களுக்கு பொன்னாடை அணிவித்து வரவேற்றார் இதனைத் தொடர்ந்து பேசிய இளைஞர் காங்கிரஸ் கட்சியின், மாநில ஒருங்கிணைப்பாளர் பிரவீன்குமார் தமிழகம் முழுவதும் சுமார் 2,000 துடிப் புள்ள இளைஞர்களைக் கண்டறிந்து, அவர்களுக்குப் பயிற்சி அளித்து, எதிர்வரும் உள்ளாட்சித் தேர்தலில் போட்டியிட வாய்ப்பளிப்பதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். மக்கள் சேவையைச் சிறப்பாக செய்ய முடியும் என்ற நம்பிக்கையில் கட்சியில் இணையும் அனைவருக்கும் திறமைக்கேற்ப பொறுப்புகள் வழங்கப்படும். ராகுல் காந்தியின் அறிவுறுத்தலின்படி தொடங்கப்பட்டுள்ள 'மக்கள் சேவகன்' திட்டத்தின் மூலம் தகுதியான இளைஞர்கள் அடையாளம் காணப்படுவார்கள். குறிப்பாக, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மட்டும் சுமார் 200 இளைஞர்களை வரவிருக்கும் உள்ளாட்சித் தேர்தலில் களமிறக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்

அப்போது மேற்கு மாவட்டத் தலைவர் ஹரிஷ் பாபு, இளைஞர் காங்கிரஸ் மாவட்டத் தலைவர் அனில்குமார், ஓசூர் மாநகர முன்னாள் காங்கிரஸ் தலைவர் தியாகராஜன் உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்துக் கொண்டனர்.

# தமிழ்நாடு மாநில தொடக்க கூட்டுறவு வங்கி அனைத்து பணியாளர்கள் சங்கம் சார்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டம்




சேலம், ஜூலை 21

தொடக்க நகர கூட்டுறவு சங்க பணியாளர்கள் அனைவருக்கும் புதிய ஊதிய உயர்வு அனுமதித்தல், ஒய்வூதியம் வழங்குதல் உள்ளிட்ட நீண்ட நாளைய கோரிக்கைகளை வலியுறுத்தி பேரணி நடத்துதல் மற்றும் வேலை நிறுத்தம் தொடர்பாக இன்று சேலத்தில் தமிழ்நாடு மாநில தொடக்க கூட்டுறவு வங்கி அனைத்து பணியாளர்கள் சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

## திருவள்ளூரில்

# தொடக்க, நகர கூட்டுறவு கடன் சங்க பணியாளர்கள் மற்றும் இதன் கட்டுப்பாட்டில் உள்ள நியாயவிலை கடை பணியாளர்களின் மாபெரும் போராட்டம்



திருவள்ளூர், ஜூலை 21

திருவள்ளூரில் தமிழ்நாடு மாநில தொடக்க கூட்டுறவு வங்கி அனைத்து பணியாளர்கள் சங்கம் சார்பில் தொடக்க, நகர கூட்டுறவு கடன்சங்க பணியாளர்கள் மற்றும் தன் க ட் டு ப் பா ட் டி ல் உள்ள நியாயவிலைகடை ப ணி யா ள ர் க ளின் 13 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி மாபெரும் போராட்டம் நடைபெற்றது. திருவள்ளூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை அருகில் தமிழ்நாடு மாநில தொடக்க கூட்டுறவு வங்கி அனைத்து பணியாளர்கள் சங்கம் சார்பில் தொடக்க, நகர கூட்டுறவு கடன் சங்க பணியாளர்கள் மற்றும் இதன் கட்டுப்பாட்டில் உள்ள நியாயவிலைகடை பணியாளர்களின் 13 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழக முதல்வர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லும் வகையில் மாபெரும் போராட்டம் நடைபெற்றது. போராட்டத்தில் புதிய ஊதிய ஒப்பந்தம் ஏற்படுத்துவதில் உள்ள தடைகளை நீக்க வேண்டும், பணியாளர்கள் பணி ஓய்வு மற்றும் கால பலன்களை வழங்குவதிர் செயற்கையாக ஏற்படுத்தப்படும் தடைகளை கைவிட வேண்டும், ஓய்வூதியம் உயர்த்தி அனைவரும் பயன்பெறும் வகையில் வழங்க வேண்டும்,தாயுமானவர் திட்டத்தில் ஏற்படும் நடைமுறை சிரமங்களை களைந்திடு, விற்பனையாளர்களை மீது அதிகார திணிப்பை கைவிட வேண்டும், சங்கங்களில் நீண்ட நாட்களாக பணிபுரியும் கணிணி பணியாளர்கள், நகை மதிப்பினர்களை நிரந்தரப்படுத்த வேண்டும்,விடுமுறை நாட்களில் விற்பனையாளர்களுக்கு வழங்கப்படும் பல்வேறு பணிகளை ரத்து செய்ய வேண்டும் என்பது உட்பட 13 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.மேலும் கோரிக்கைகளை நிறைவேற்றாத பட்சத்தில் வரும் 03.08.2026அன்றுகாலவரையற்றவேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபடப்போவதாக எச்சரித்துள்ளனர். தமிழ்நாடு மாநில தொடக்ககூட்டுறவு வங்கி அனைத்து பணியாளர்கள் சங்க நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## 15 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி

# தொடக்க கூட்டுறவு வங்கி பணியாளர்கள் சங்கத்தினர் பேரணி கலெக்டரிடம் மனு கொடுத்தனர்




ஈரோடு ஜூலை 21

தமிழ்நாடு மாநில தொடக்க கூட்டுறவு வங்கி அனைத்து பணியாளர்கள் சங்கம் சார்பில் 15 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி ஈரோடு இடையன் காட்டு வலசு பகுதியில் இருந்து பேரணி நடந்தது. நசியனூர் ரோடு வழியாக சென்ற இந்த பேரணி சம்பத் நகர் கொங்கு கலையரங்கை அடைந்தது. அங்கு கோரிக்கைகள் பற்றி மாவட்ட செயலாளர் மாரிமுத்து விளக்கி பேசினார் .இந்த நிகழ்ச்சியில் துணைத் தலைவர்கள் மதியழகன் செந்தில் குமார் இணை செயலாளர்கள் முத்துகிருஷ்ணன் வசந்தகுமார் ஆகியோர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

இதன் பிறகு கோரிக்கை மனுவை மாவட்ட ஆட்சியர் கந்தசாமியிடம் கொடுத்தனர். இந்த பேரணியில் ஒன்றிய நிர்வாகிகள் சங்க பணியாளர்கள் நியாய விலைக் கடை பணியாளர்கள் நகை மதிப்பீட்டாளர்கள் கணினி பணியாளர்கள் மற்றும் தமிழ்நாடு மாநில தொடக்க கூட்டுறவு வங்கி ஒய்வு பெற்ற பணியாளர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர். தாயுமானவர் திட்டத்தில் உள்ள முரண்பாடுகளை களைய வேண்டும் பாக்கெட் முறையை விரைவில் அமுல்படுத்த வேண்டும் அனைத்து ரேஷன் கடைகளிலும் இத் திட்டத்தை அமல்படுத்துவதற்கு பதிலாக ஒன்றிய அளவில் பயனாளிகளை தேர்வு செய்து அவர்களுக்கு மட்டும் வினியோகம் செய்திட அரசே வாகன வசதி செய்து கொடுக்க வேண்டும் அதற்கான பணியாளர்களையும் நியமனம் செய்து இந்த திட்டத்தை அமல்படுத்த வேண்டும். கடந்த 2021 ம் ஆண்டுக்கு பின்னர் ஓய்வு பெற்ற பணியாளர்கள் அனைவருக்கும் ஓய்வூதியம் வழங்க வேண்டும் தற்போது பணி ஓய்வு பெற்றவர்கள் வாங்கும் கருணை தொகையை மைய வங்கி பணியாளர்களுக்கு இணையாக வழங்க வேண்டும். கணினி பணியா

ளர்களை சிறப்பு தேர்வு மூலம் நிரந்தர பணியாளர்களாக நியமிக்க வேண்டும் தகுதியுள்ள நகை மதிப்பாளர்களை நிரந்தரப்படுத்த வேண்டும் . பணியாளர்கள் பணிக்கொடையை அரசு ஊழியர்களுக்கு இணையாக ரூ 25 லட்சம் உயர்த்தி வழங்க வேண்டும் என்பது உட்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி இந்த பேரணி நடந்தது.

# வெப்பாலை ஊராட்சியில் தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்பட கண்காட்சி



வேலூர், ஜூலை 21

வேலூர் மாவட்டம் காட்பாடி ஊராட்சி ஒன்றியம் வெப்பாலை ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் மூலம் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சியினை ஊராட்சி செயலாளர் .குமரேசன் முன்னிலையில் பொதுமக்கள் ஆர்வத்துடன் பார்வையிட்டனர்.




தூத்துக்குடி மாவட்டம், புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் உள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திர வைப்பறையில் இன்று மாவட்ட தேர்தல்அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் விஷு மகாஜன், அங்கீகரிக்கப்பட்ட அனைத்து கட்சி பிரமுகர்கள் முன்னிலையில் மாதாந்திர ஆய்வு மேற்கொண்டார்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.